அசல் வழக்கு எண். 40/2019 வா.சா.1 கேசவன் த/பெ குமார்

**<u>14.11.2024 குறுக்கு விசாரணை</u>**

1. நான் தற்போது வசிப்பது பங்களா தெரு. அந்த தெருவிற்கு பாரதியார் தெரு என்று பழைய பெயர் உண்டு என்றால் சரிதான். நான் குடியிருக்கும் வீடு என் தாத்தா வாங்கிய சொத்து என்றால் கிரய பத்திரம் என் பாட்டி ரத்தினம்மாள் பெயரில் உள்ளது. என் தாத்தா கிரயம் வாங்கினாரா என்று எனக்கு தெரியாது. என்பாட்டியை நான் பார்த்தது இல்லை. என் பாட்டி வேலை ஏதாவது செய்தாரா என்றால் என்பாட்டி பற்றி எனக்கு எதுவும் தெரியாது.

2. நான் இருக்கும் வீடானது என் தாத்தா கண்ணன் தனது பணத்தை கொண்டு அவரது மனைவியான என் பாட்டி ரத்தினம்மாள் பெயரில் கிரயம் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல. என் பாட்டி ரத்தினம்மாளின் தகப்பனார் திருவேங்கடம் பணத்தை கொண்டு கிரயம் வாங்கிய சொத்து என்று சொன்னார்கள். அவ்வாறு என் பாட்டி ரத்தினம்மாளின் தகப்பனார் திருவேங்கடம் தனது பணத்தை கொண்டு கிரயம் வாங்கிய சொத்துஎன்று தாவாவில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் என் வழக்கறிஞரிடம் சொன்னேன் அவர் அதுபற்றி குறிப்பிட்டாரா என்று எனக்கு தெரியாது. நான் சொல்வது தவறு என்றும் திருவேங்கடம் தனது பணத்தை கொண்டு நான் இருக்கும் வீட்டை என் பாட்டிபெயரில் வாங்கியதாக வழக்கிற்காக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

3. நான்இருக்கும் வீட்டின் வரி ரசீது கண்ணன் பெயரில் தான் உள்ளதுஎன்றால் சரிதான். என் தாத்தா கண்ணன் உயிருடன்இருந்தவரையில் அவர்தான் வீட்டு வரி செலுத்தி வந்தார் என்றும் அவரது இறப்பிற்கு பிறகு பிரதிவாதிகள் வீட்டுவரி கட்டி வருகிறார்கள்என்றால் சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)